In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023 | Prosecution witness P.W.10
Name: Shanmugam | Calling:
Father Name: | Religion:
Village: | Caste:
Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. Other Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் தீப்பாச்சியம்மன்கோவில் குடியிருக்கிறேன். கார்பெண்டராக வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்த சரவணன் எனக்கு சித்தி மகன் முறை வேண்டும். 20.07.2023 ம் தேதி நான் வேலைக்கு போய்விட்டு இரவு 7 மணியளவில் எனது வீட்டிற்கு வந்தேன். அப்போது அந்த வழியாக சென்றுகொண்டிருந்தவர்கள் சரவணனை கொலை செய்துவிட்டதாகச் சொன்னார்கள். அதை கேட்டபின்னர் நானும் விமலா ஆஸ்பத்திரி அருகில் சென்று பார்த்தேன். அங்கு சரவணன் தலை சிதைந்த நிலையில் இறந்து கிடந்தார். 10 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்தது. அந்த ஆம்புலன்சில் சரவணனை ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனை கொண்டு சென்றார்கள். நானும் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று இரவு முழுவதும் அங்கேயே இருந்தேன். மறுநாள் காலை 6.30 மணியளவில் ஆய்வாளர் மருத்துவமனை வந்து இறந்த சரவணனின் பிரேதத்தின் மீது விசாரணை மேற்கொண்டு 8.30 மணியளவில் விசாரணை முடித்து என்னிடம் கையெழுத்து கேட்டார். நான் போட்டேன். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**7,8,9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

21.07.2023 ம் தேதி காலையில் போலீசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலுசார் விசாரணையில் நான் வேலைக்கு போய்விட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த ஆட்கள் எனனிடம் பட்டறை சரவணனை கொலை செய்த விவரத்தை எனனிடம் சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தீப்பாச்சியம்மன் கோவில் தெரு என்பது பாலத்தின் தென்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். அங்கு வரிசையாக வீடுகள், கடைகள் உள்ளது என்றால் சரிதான். நானும் அசா9 குணசேகரனும் உறவினர்கள் என்றும் இறந்துபோன சரவணன் எங்கள் இருவருக்கும் உறவினர் என்றும் சொன்னால் சரிதான். நான் கொலை நடந்த இடத்திற்கு சென்றதாகவும், போலீசார் என்னை விசாரித்ததாகவும் நான் சொல்வது என்றால் சரியல்ல.

**1,3,45,6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – 7,8,9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.28 17:05:44 +0530

Principal District Judge,
Dindigul.